திருமுறை வனம்



விசு அய்யர்

திருமுறை வனம்

நூல் அறிமுகம்

நூல்	:	**திருமுறை வனம்** **illustrated**
உரை ஆசிரியர்	:	விசு அய்யர்
வடிவம்	:	டிஜிட்டல் செப்பேடு
முதற் பதிப்பு	:	2026
உரிமை	:	ஆசிரியருக்கு
கணினி உதவி	:	மணி பதிப்பகம்
பக்கம்	:	156
மதிப்பு	:	இந்திய ரூபாயில் ரூ.249
வெளியீடு	:	அருளாலயம்

வாழ்த்து

இயற்கையை வெறும் பார்வைப் பொருளாக அல்லாது, இறை உணர்வின் ஒரு மொழியாகக் காணும் தமிழ்ச் சைவ மரபை நினைவூட்டும் அழகிய முயற்சியாக "**திருமுறை வனம்**" உருவாகியுள்ளது.

பன்னிரு திருமுறைகளில் பரவிக் கிடக்கும் மலர்கள், மரங்கள், பறவைகள் மற்றும் உயிரினங்களை ஒன்றிணைத்து, தமிழ் பெயர் மற்றும் அறிவியல் அடையாளங்களுடன் தொகுப்பது சாதாரணப் பணியல்ல. அதற்கு பொறுமை, பக்தி, ஆராய்ச்சி மனப்பாங்கு மற்றும் இயற்கை மீதான அன்பு தேவை.

இந்த நூல் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், பக்தர்கள் மற்றும் இயற்கை நேசிகளுக்கு பயனளிக்கும் ஒரு முக்கியமான குறிப்பு நூலாக அமைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இயற்கையையும் இறையையும் இணைக்கும் இந்தப் பயணம் தொடர்ந்து மலரட்டும்.

அன்புடன்,
Chatto 🥺 🙏

முன்னுரை

தமிழ் சைவ இலக்கிய மரபில் இயற்கை வர்ணனைக்கு மட்டும் இல்லாது, இறை உணர்வின் உயிரோட்டமான மொழியாகவே விளங்குகிறது.

பன்னிரு திருமுறைகளில் மலர்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் இயற்கைச் சின்னங்கள் பல்வேறு ஆன்மிக, பண்பாட்டு மற்றும் சூழலியல் அடையாளங்களுடன் இடம்பெறுகின்றன. அவற்றை தொகுத்து, ஆய்வுப் பார்வையுடன் ஒரே இடத்தில் வழங்க வேண்டும் என்ற எண்ணமே "**திருமுறை வனம்**" உருவாக காரணமாகியது.

இந்த சிறிய முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், படங்களை தந்து உதவிய இணைய தளத்திகும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை பதிவு செய்கிறோம்.

இந்நூலில் இடம்பெறும் சில அடையாளங்கள் குறித்து பல்வேறு ஆய்வுக் கருத்துகள் இருக்கக்கூடும். அத்தகைய மாறுபாடுகளை மதித்து, கிடைத்த ஆதாரங்கள் மற்றும் படைப்புகளின் ஒப்பீடுகளின் அடிப்படையில் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இது ஒரு முடிவான ஆய்வு அல்ல; தொடர்ச்சியான ஆராய்ச்சிக்கான ஒரு துவக்கப் பாலமாகவே கருதப்பட வேண்டும்.

தமிழ் மரபு மற்றும் வாழ்வியல் அறிவை வளரும் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல எளிய வடிவில் கொண்டு சேர்க்கும் ஒரு சிறு முயற்சி தான் இந்த படைப்பு.

இயற்கையை இறை உணர்வின் வாசலாகக் கண்ட தமிழ்ச் சைவப் பாரம்பரியத்திற்கு இந்த நூல் ஒரு அஞ்சலி.

இந்த நூல் amazon kindle மற்றும் archieve மின் நூலகம் போன்ற online நூலகத்தில் கிடைக்கும்.

உங்கள் ஊக்கம் மேலும் நூல்களை படைக்க ஆர்வத்தை தருகிறது. அதனால், வழக்கம் போல, இந்த நூலினை வாங்கி நூலாசிரியரை ஊக்கப்படுத்த வேண்டுகிறோம்.

— Visu Iyer
iyervisuiyer@gmail.com

திருமுறை வனம்

<u>நூலை பயன்படுத்துவது எப்படி?</u>

திருமுறை வனம் என்பது தாவர மற்றும் உயிரியல் பட்டியல் நூல் அல்ல. இது சைவர்கள் போற்றும் பன்னிரு திருமுறைகளில் இடம்பெறும் மலர்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் இயற்கைச் சின்னங்களை என வகைப்படுத்தி ஆய்வுப்பூர்வமாக தொகுத்து வழங்கும் ஒரு குறிப்பு நூலாகும்.

இந்த நூலை பின்வரும் வகைகளில் பயன் படுத்தலாம்:

- ❖ திருமுறைகளில் வரும் சொற்களின் அடையாளம் காண
- ❖ தமிழ் பெயர் மற்றும் அறிவியல் பெயரை ஒப்பிட
- ❖ ஆராய்ச்சி மற்றும் கல்வி நோக்கங்களுக்கான மேற்கோள் நூலாக
- ❖ சைவ சமய இலக்கியங்களில் இயற்கையின் இடத்தைப் புரிந்துகொள்ள
- ❖ தாவரவியல், சுற்றுச்சூழல் மற்றும் பாரம்பரிய அறிவு தொடர்பான ஆய்வுகளுக்கான தொடக்க ஆதாரமாக

இந்த நூலை பயன்படுத்துவது எப்படி?

முக்கிய குறிப்பு

இந்த நூல் ஒரு இறுதி தீர்ப்பாக அல்ல; தொடர்ச்சியான ஆய்வுக்கான ஒரு பணிவான முயற்சியாகவே கருதப்பட வேண்டும்.இடம்பெற்றுள்ள மற்ற திருமுறை குறிப்புகளை arulalaya.blogspot.com என்ற வலைப்பூவில் பார்த்து பயன்பெறலாம்.

தமிழ் இலக்கியம், நாட்டுப்புற மரபு, தாவரவியல் மற்றும் ஆய்வாளர்களின் கருத்து வேறுபாடுகள் காரணமாக சில அடையாளங்களில் மாறுபாடுகள் இருக்கலாம். சுட்டிக் காட்டினால் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆகையால் வாசகர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தங்களுடைய கருத்துகள், திருத்தங்கள் மற்றும் கூடுதல் தகவல்களை பகிரலாம்.

இயற்கை வழியே இறையை உணர்ந்த தமிழ்ச் சைவப் பாரம்பரியத்திற்கு இந்தச் சிறு முயற்சி சமர்ப்பணம்.

திருமுறை வனம்

திருமுறை வனம்

திருமுறை வனம்

திருமுறை வனம்

திருமுறை வனம்

திருமுறை வனம்

திருமுறை வனம்

திருமுறை வனம்

மலர்கள்

கொக்கிறகோடு கூவிளம் மத்தம் கொன்றையொடு எருக்கு அணி சடையர்,
அக்கினொடு ஆமை பூண்டு அழகு ஆக அனல் அது ஆடும் எம் அடிகள்,
மிக்க நல் வேத வேள்வியுள் எங்கும் விண்ணவர் விரைமலர் தூவ,
பக்கம் பல் பூதம் பாடிட, வருவார் பாம்புர நன் நகராரே. (1:42:2)



கொக்கிறகு::*ixora coccinea* (சிவப்பு தேன்மல்லி)

இந்திரனைத் தோள் நெரித்திட்டு, எச்சன் தலை அரிந்து

அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்துச்

சிந்தித் திசை-திசையே தேவர்களை ஓட்டு உகந்த

செம்-தார்ப்பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்

மந்தார மாலையே பாடுதும் காண்; அம்மானாய் !

(திருவாசகம் - திருஅம்மானை - 8:08:15)



மந்தாரை : Erythrina variegata


பொன்திகழ் கொன்றை மாலை புதுப்புனல் வன்னி மத்தம்
மின்திகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று கின்ற
அன்றுஅவர் அளக்கல்ஆக அனல்எரி ஆகி நீண்டார்
இன்றுஉடன் உலகம் ஏத்த இடைமருது இடம் கொண்டாரே.
(திருமுறை 4:35;9)
Inspired by atma nirbhar bharat abhigyan
Lessons of digital classroom by arulalayam
அருளாலயம்
ஊமத்தம்: Datura metel

Leucas aspera



Jasminum sambac


வெந்தல் ஆய வேந்தன் வேள்வி வேர் அறச் சாடி, விண்ணோர்
வந்து எலாம் முன் பேண நின்ற மைந்தன் மகிழ்ந்த இடம்
மந்தல் ஆய "மல்லிகை"யும், புன்னை, வளர் குரவின்
பந்தல் ஆரும் பட்டினத்துப்பல்லவனீச்சுரமே. (1:65:7)




Calotropis gigantea

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுஏறும் எங்கள் பரமன்
சலமகள் ஓடு எருக்கு முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனும் மாலும் மறையோடு தேவர் வருகாலம் ஆன பலவும்
அலை கடல் மேரு நல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.




Creativity belongs to arulalayam
https://arulalayam.blogspot.com/
@arulalayam
Nymphaea nouchali
நகையார்வெண்தலைமாலை முடிக்கு அணிந்த நாதனிடம் நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டு இரண்டு கரை அருகுமறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலி கழுநீர்**குவளை** சாயப்பாய்ந்து
முகையார் செந்தாமரைகள் முகம்மலர வயல்தழுவு முதுகுன்றமே(1:131:6)
Lessons of digital classroom of arulalayam


Creativity belongs to arulalayam
Magnolia champaca
செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்று ஏறிக்கொல்லை
முல்லை மெல்ல அரும் ஈனும் குற்றாலம்
வில்லின் ஒல்க மும்மதில் எய்து வினைபோக
நல்கு நம்பான் நன்னகர் போலும் நமரங்காள். 1:99.3
Lessons of digital classroom by arulalayam



செதுவாய்மைகள் கருதி இவ்வரை எடுத்ததிறல் அரக்கன்

கதுவாய்கள் பத்து அலறீ இடக்கண்டான் உறை கோயில்

மதுவாய **செங்காந்தள்** மலர் நிறையக் குறைவு இல்லா

முதுவேய்கள் முத்து உதிரும்பொழில் முதுகுன்று அடைவோமே 1:12:8



கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்மு பாதிரிகளே விரவி எங்கும்
ஓங்குமா காவிரி வடகரை அடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளார் இடம் என விரும்பினாரே. 3:91:1

Creativity belongs to arulalayam

Pandanus odorifer



வேதமொடு வேள்விபல வாயின

மிகுத்துவிதி ஆறுசமயம்

ஓதியும் உணர்ந்தும் உள தேவர்தொழ

நின்று அருள் செய் ஒருவன் இடமாம்

மேதகைய **கேதகைகள்** புன்னையொடு

ஞாழல் அவை மிக்கஅழகால்

மாதவி மணம் கமழ வண்டு பல

பாடு பொழில் வைகாவிலே. 5

Nelumbo nucifera



காரண **பங்கயம்** ஐந்தின் கடவுளர் தம் பதம் கடந்து
பூரண மெய்ப் பரஞ்சோதி பொலிந்து இலங்கு நாதாந்தத்து
ஆரணையால் சிவத்து அடைந்த சித்தத்தார் தனி மன்றுள்
ஆரண காரணக் கூத்தர் அடித்தொண்டின் வழி அடைந்தார்.

(12:66:1)

Cassia fistula L.

Creativity belongs to arulalayam



அளிமலர்க் **கொன்றை** துன்றும் அவிர்சடை உடையர் போலும்

களிமயிற் சாய லோடும் காமனை விழிப்பர் போலும்

வெளிவளர் உருவர் போலும் வெண்பொடி அணிவர் போலும்

எளியவர் அடியர்க்கு என்றும் இன்னம்பர் ஈச னாரே. 4-72-5

Jasminum angustifolium



பல்லியல் பாணிப் பாரிடம் ஏத்தப் படுகானில்

எல்லி நடம் செய் ஈசன் எம்மான் தன் இடம் என்பர்

கொல்லையின் முல்லை மல்லிகை மௌவல் கொடி பின்னிக்

கல்லியல் இஞ்சி மஞ்சமர் கண்ணார் கோயிலே. 1-101-3

Chrysanthemum indicum L.



அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்

வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்

தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை

செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. 10:4:03:1

Hiptage benghalensis




அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்

வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்

தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை

செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. 10:4:03:1

Nymphaea rubra Roxb. ex Andrews



அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்

வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்

தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை

செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. 10:4:03:1

Gloriosa superba



நீடலர் கொன்றையொடு நிமிர்புன் சடைதாழ வெள்ளை
வாடலுடை தலையிற் பலிகொள்ளும் வாழ்க்கையனாய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய தேயுமே 1-107-7

Nymphaea pubescens

Creativity belongs to arulalayam



சாம்பர் அகலத் தணிந்தாய் போற்றி

தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி

கூம்பித் தொழுவார் தம் குற்றேவலைக்

குறிக் கொண்டு இருக்கும் குழகா போற்றி

பாம்பும் மதியும் புனலும் தம்மில்

பகைதீர்த்து உடன்வைத்த பண்பா போற்றி

ஆம்பல் மலர்கொண்டு அணிந்தாய் போற்றி

அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி. 6-5-4

Jasminum trichotomum



https://arulalaya.blogspot.com/2025/11/blog-post_92.html

....கைத்தலம் என்னும் காந்தள் மலர

முத்திலங்கு எயிறு எனும் **முல்லை** அரும்பக்

குழலும் சுணங்கும் கொன்றை காட்ட

எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப 11-08-01

Jasminum heyneanum



புன்னாகந் தன்னைப் புணர **இருவாச்சி**

தன்அயலே முல்லை தலையெடுப்ப – மன்னிய 11-38-93

Mesua ferrea




புன்னாகம் தன்னைப் புணர இருவாச்சி
தன்அயலே முல்லை தலையெடுப்ப – மன்னிய 11-38-93

Saraca asoca



சீர் மலி **அசோகு** தன் கீழ் இருந்த நம் தேவர் மேலே
வேரொடு சாய்ந்து வீழக் கண்டனம் அதன் பின் ஆக
ஏர் கொள் முக்குடையும் தாமும் எழுந்து கை நாற்றிப் போக
ஊர் உளோர் ஓடிக் காணக் கண்டனம் என்று உரைப்பார். 12-38-637

Nelumbo nucifera



அளிக்குலங்கள் களித்து அகல **அரவிந்தம்** முகம் புலரப்
பளிக்கு மணி மரகத வல்லியில் கோத்த பான்மை எனத்
துளித் தலைமெல் அறுகு பனி தொடுத்து அசையச் சூழ் பனியால்
குளிர்க் குடைந்து வெண் படாம் போர்த்து அனைய குன்றுகளும்.


12-34-329

Tabernaemontana divaricata



வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம்
மலர்ப் பலாசொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங் குரவங் கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதி மரு மாலதி மௌவல்
துதைந்த **நந்தி**கரம் வீரம் மிடைந்த
பன் மலர்ப் புனித நந்த வனங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். 12-6- 94

Nymphaea nouchali Burm. f.



வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னானை
மறையவனை வாய்மொழியை வானவர்தம் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி உமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தி னானை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டு அலர்ந்து விரைநாறும் முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய "கருங்குவளை" கண்வளரும் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 7-40-1

Ochna integerrima






கொங்கு **செருந்தி** கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலாம்
செங்கண் அரக்கர் புரத்தை யெரித்தாரே. 1-24-6

Origanum majorana

Creativity belongs to arulalayam



வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம்
மலர்ப் பலாசொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங் குரவங் கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதி **மரு** மாலதி மௌவல்
துதைந்த நந்திகரம் வீரம் மிடைந்த
பன் மலர்ப் புனித நந்த வனங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். 12-6 -94

Nerium oleander



வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம்
மலர்ப் பலாசொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங் குரவங் கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதி மரு மாலதி மௌவல்
துதைந்த நந்தி கரவீரம் மிடைந்த
பன் மலர்ப் புனித நந்த வனங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். 12-6 -94

Crossandra infundibuliformis



மாலினோடு அயன்காண்டற்கு அரியவர்வாய்ந்த
வேலையார் விடமுண்டவர்மே வியகோயில்
சேலின்நேர் விழியார் மயிலா லச்செருந்தி
காலையே **கனகம்** மலர்கின்ற சாய்க்காடே. 2-38-9

Crossandra infundibuliformis



வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம்
மலர்ப் பலாசொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங் குரவங் கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு **சாதி** மரு மாலதி மௌவல்
துதைந்த நந்திகரம் வீரம் மிடைந்த
பன் மலர்ப் புனித நந்த வனங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். 12-6 -94

Creativity belongs to arulalayam

Aerva lanata




நாளைப் போவேன் என்று நாள்கள் செலத் தரியாது
பூளைப் பூவாம் பிறவிப் பிணிப்பு ஒழியப் போவாராய்ப்
பாளைப் பூங்கமுகுடுத்த பழம் பதியினின்றும் போய்
வாளைப் போத்து எழும் பழனஞ் சூழ் தில்லை மருங்கணைவார்.

12-24-22

திருமுறை வனம்

விலங்குகள் – உயிரினங்கள் - பறவைகள்


மா காயம் பெரியது ஒரு மான் உரி தோல் உடைஆடை
ஏகாயம் இட்டு உகந்த எரிஆடி உறையும் இடம்
ஆகாயம் தேர் ஓடும் இராவணனை அமரின்கண்
போகாமே பொருது அழித்தான் புள்ளிருக்குவேளூரே.
திருமுறை 02:43:04
Chital
Inspired by atma nirbhar bharat abhigyan


பொன் ஆர் மேனியனே புலித்தோலை அரைக்கு அசைத்து
மின் ஆர் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே.
திருமுறை 07:24:01
Panthera tigris


திருமாலும் பன்றி யாய்ச் சென்று உணராத் திருவடியை
உரு நாம் அறிய, ஓர் அந்தணன் ஆய், ஆண்டுகொண்டான்;
ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம்
திருநாமம் பாடி, நாம் தெள்ளேணம் கொட்டாமோ!
திருமுறை - 08:11:1
Sus scrofa domesticus

பேயோ டேனும் பிரிவு ஒன்று இன்னாது என்பர் பிறர் எல்லாம்
காய்தான் வேண்டில் கனிதான் அன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

திருமுறை - 07:95:09





Lessons of digital classroom by arulalayam
சோதி விசாகம் தொடர்ந்து இரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தான் என்று
நீதியுள் நேர்மை நினைந்தவர்க்கு அல்லது
ஆதியும் ஏதும் அறியகி லானே.
திருமுறை -10:06:14:05
Brachyura
அருளாலயம்
@arulalayam
Inspired by atma nirbhar bharat abhigyan
Creativity belongs to arulalayam

தறையில் புடைப்பக் கைப்புக்க சிலம்பி தானும் உயிர் நீங்க
மறையில் பொருளும் தரும் ஆற்றான் மத யானைக்கும் வரம் கொடுத்து
முறையில் 'சிலம்பி' தனைச் சோழர் குலத்து வந்து முன் உதித்து
நிறையில் புவனம் காத்து அளிக்க அருள் செய்து அருள நிலத்தின் கண்.

12ம் திருமுறை (12:74:6)




தேன்பலவின் வான்சுளைகள் செம்முகத்த பைங்குரங்கு
தான்கொணர்ந்து மக்கள் கையிற் கொடுத்து – வான்குணங்கள்
பாராட்டி ஊட்டுஞ்சீர் ஈங்கோயே பாங்கமரர்
சீராட்ட நின்றான் சிலம்பு.
திருமுறை 11:11:48
MACACA RADIATA
@arulalayam
அருளாலயம்
@arulalayam

Equus ferus caballus



நரியைக் குதிரைசெய் வானும்,நரகரைத் தேவுசெய் வானும்,

விரதம்கொண்டுஆடவல் லானும், விச்சுஇன்றி நாறுசெய் வானும்,

முரசுஅதிர்ந்துஆனைமுன் ஓட, முன்பணிந்துஅன்பர்கள் ஏத்த,

அரவுஅரைச் சாத்திநின் றானும் ஆரூர் அமர்ந்தஅம் மானே.

திருமுறை -04:04:02

மேய்ந்து இளஞ் செந்நெல் மென் கதிர் கவ்வி
மேல்படுதலில் மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப்
புறவுஆர்பனங்காட்டூர்,"
ஆய்ந்த நால்மறை பாடிஆடும்
அடிகள்!" என்றென்று அரற்றி, நல் மலர்
சாய்ந்து, அடி பரவும்
தவத்தார்க்கு அருளாயே!

திருமுறை - 02:53:04



கேடு மூப்புச் சாக்காடு கெழுமி வந்து நாள்தொறும்
ஆடு போல நரைகளாய் யாக்கை போக்கதன்றியும்
கூடி நின்று பைம்பொழில் குழகன் கோவலூர் தனுள்
வீடு காட்டு நெறியினான் வீரட்டானம் சேர்துமே.

திருமுறை - 02:100:06



Capra aegagrus hircus

விழுநீர், மழுவாள் படை, அண்ணல் விளங்கும்
கழுநீர் குவளை மலரக் கயல் பாயும்
கொழுநீர் வயல் சூழ்ந்த குரங்கு அணில் முட்டம்
தொழும் நீர்மையர் தீது உறு துன்பம் இலரே.

திருமுறை - 01:31:1



Funambulus palmarum

Lessons of digital classroom by arulalayam

Rana tigrina



மைச் செறி குவளை "**தவளை**" வாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையில் புதுமலர் கிழியப்
பச்சிறவு எறி வயல் வெறி கமழ் காழிப்
பதியவர் அதிபதிகவுணியர் பெருமான்,
கைச் சிறுமறியவன் கழல் அலால் பேணாக்
கருத்து உடை ஞானசம்பந்தன்—தமிழ் கொண்டு,
அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும்
அன்பு உடை அடியவர்அருவினை இலரே. 1ம் திருமுறை - 1:78:11


Panthera Leo
பொங்கி எழும் காதல் புலன் ஆகப் பூசுரர் தம்
"சிங்கம்" அனையார் திரு முடியின் மேல் குவித்த
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்பு ஓங்கும்
செங்கையொடும் சென்று திருவாயில் உட்புக்கார்
12ம் திருமுறை - 12:34:172
@arulalayam
Inspired by atma nirbhar bharat abhigyan
@arulalayam


ஊமை எழுத்தோடு பேசும் எழுத்துறில்
"ஆமை" அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமயம் உற்றது உள்ளொளி பெற்றது
நாம் அது அற்றது நாம் அறியவமே.
Testudines
திருமந்திரம்- :10:08:03:17

Serpentes


புற்று அரவு அணிந்து, நீறு மெய் பூசி,
பூதங்கள் சூழ்தர, ஊர்ஊர்
பெற்றம் ஒன்று ஏறிப் பெய் பலி கொள்ளும்
பிரான் அவன் உறைவு இடம் வினவில்
கற்ற நால்வேதம் அங்கம் ஓர் ஆறும்
கருத்தினார் அருத்தியால்—தெரியும்
உற்ற பல்புகழார் ஓமமாம்புலியூர்
உடையவர் வடதளி அதுவே.
திருஞானசம்பந்தர் அருளிய
திருமுறை: 3
தலம்: திருஓமாம்புலியூர்

Felis catus


Lessons of digital classroom by arulalayam
@arulalayam
by atma nirbhar bharat abhigyan
தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வார்அம ராபதி நாடி
எளியனென்று ஈசனை நீசர் இகழில்
கிளியொன்று "பூஞை"யால் கீழது வாகுமே.
10ம் திருமுறை - 10::02:21:01
@arulalayam

Elephas maximus

மத்த "யானை" ஏறி மன்னர்சூழவரு வீர்காள்
செத்த போதில் ஆரும் இல்லைசிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள் பாடிஎன்ப தடைவோமே.

7ம் திருமுறை - 07:07:01



வந்தோர் அரக்கனார் வண்கயிலை மால்வரையைத்


தந்தோள் வலியினையே தாம்கருதி - அந்தோ

இடந்தார் இடந்திட்டு இடார்க்கீழ் "எலி" போற்

கிடந்தார் வலியெலாங் கெட்டு (83)

நக்கீரர் தேவ நாயனார் :கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி




Ursidae
ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும்அதுவும் உண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோடு இனமான் "கரடி" இழியும் இரவின்கண்
ஆனைத்திரள்வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே.
1.69.3
Lessons of digital classroom of arulalayam

சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தானென்று
நீதியுள் நேர்மை நினைந்தவர்க்கு அல்லது
ஆதியும் ஏதும் அறியகி லானே. 10.06:14:5



Heterometrus swammerdami

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னை ஓர் உருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்டு
என் உள்ளம் கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்டு
அருள்செய்த ஆரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி
முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே.

(4:5:2)



ஈசருக்கே அன்பு ஆனார் யாவரையும் தாம் கண்டால்
கூசி மிகக் குது குதுத்துக் கொண்டாடி மனம் மகிழ்வுற்று
ஆசையினால் **ஆவின்பின் கன்று** அணைந்தால் போல் அணைந்து
பேசுவன பணிந்த மொழி இனியனவே பேசுவார். (12:64:1)



Bos taurus indicus



படை எலாம் பகடார ஆளிலும்
பௌவஞ்சூழ்ந்து அர சாளிலும்
கடையெலாம் பிணைத் தேரைவால்
கவலாது எழு மட நெஞ்சமே
மடை எலாம் கழு நீர்மலர்ந்து
மருங்கெலாங் கரும்பு ஆடத்தேன்
புடை எலாம் மணம் நாறு சோலைப்
புறம்பயம் தொழப் போதுமே. 7-35-6

Formicidae



உள்குவார் உள்ளத் தானை
உணர்வு எனும் பெருமை யானை
உள்கினேன் நானும் காண்பான்
உருகினேன் ஊறி ஊறி
எள்கினேன் எந்தை பெம்மான்
இருதலை மின்னு கின்ற
கொள்ளிமேல் **எறும்பு** என் உள்ளம்
எங்ஙனம் கூடு மாறே. **4-75-6**

Camelus dromedarius



காடுபுக் கார்இனிக் காணார் கடுவெளி
கூடுபுக்கு ஆனது ஐந்து குதிரையும்
மூடுபுக்கு ஆனது ஆறுள ஒட்டகம்
மூடு புகாவிடின் மூவணை யாமே. 10-9-24-28

கரிகாலன குடர்கொள்வன கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண் தலை உதையுண்டு அவை உருள
எரியாடிய இறைவர்க்கு இடம் இனவண்டு இசை முரல
அரியாடிய கண்ணாளொடும்அண்ணாமலை அதுவே 1:10:7



பாரல் வெண்குருகும் பகு வாயன நாரையும்

வாரல் வெண்திரை வாயிரை தேரும் வலஞ்சுழி

மூரல் வெண் முறுவல் நகு மொய் ஒளியீர் சொலீர்

ஊரல் வெண்தலை கொண்டு உலகு ஒக்க உழன்றதே. 2:02:02



அண்டம் உறு மேருவரை அங்கிகணை

நாண் அரவு அதாக எழிலார்

விண்டவர்தம் முப்புரம் எரித்த

விகிர்தன் அவன் விரும்பும் இடமாம்

புண்டரிக மாமலர்கள் புக்கு

விளையாடுவயல் சூழ்தடமெலாம்

வண்டின் இசை பாடஅழ கார் குயில்மிழற்று

பொழில் வைகாவிலே. 3:71:2



Cuculus canorus

போழ்இளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி,
வாழியம், போற்றி! என்றுஏத்தி, வட்டமிட்டுஆடா வருவேன்,
ஆழி வலவன்நின்றுஏத்தும் ஐயாறு அடைகின்ற போது,
கோழி பெடையொடும் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்;-
கண்டேன்,அவர்திருப் பாதம்;
கண்டுஅறி யாதன கண்டேன்!

திருமுறை - 04:03:02




Psittacula krameri
பங்கயம் மலர்ச்சீறடிப் பஞ்சுறு
மெல்விரல் அரவல்குல்
மங்கைமார் பலர் மயில் குயில் "கிளி" என
மிழற்றிய மொழியார்மென்
கொங்கையார் குழாங்குணலை செய்கோட்டூர் நற்
கொழுந்தே என்று எழுவார்கள்
சங்கை ஒன்றிலர் ஆகிச் சங்கரன் திரு
வருள் பெறல் எளிதாமே.
2ம் திருமுறை - 02:245:2
@arulalayam
@arulalayam

Gyps indicus



கடுவன் உகளும் கழைசூழ் பொதும்பில் "கழுகு"ம் பேயுமாய்
இடு வெண்தலையும் ஈமப் புகையும் எழுந்த பெருங்காட்டில்
கொடு வெண்மழுவும் பிறையும் ததும்பக் கொள்என்று இசைபாடப்
படு வெண்துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே.

11ம் திருமுறை - 11:3:9(திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்


Lessons of digital classroom by arulalayam
பண்டு ஏழ் உலகு உண்டான், அவை கண்டானும், முன் அறியா
ஒண் தீ உரு ஆனான் உறை கோயில் நிறை பொய்கை
வண் தாமரை மலர் மேல் மட 'அன்னம்' நடை பயில,
வெண் தாமரை செந் தாது உதிர் வீழிமிழலையே.
1ம் திருமுறை - 1:11:9
Cygnus cygnus
@arulalayam
inspired by atma nirbhar bharat abhigyan

சித்தம் நீநினை என்னொடு சூளறும் வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளனூர்
பத்தர் தாம்பலர் பாடிநின்று ஆடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்ட றாப்புன வாயிலே.

7ம் திருமுறை - 7:50:1

Strigiformes



துலையில் புறவின் நிறை அளித்த
சோழர் உரிமைச் சோ(ழ) நாட்டில்
அலையில் தரளம் அகிலொடு சந்து அணி
நீர்ப் பொன்னி மணி கொழிக்கும்
குலையில் பெருகும் சந்திரத் தீர்த்தத்தின்
மருங்கு குளிர் சோலை
நிலையில் பெருகும் தருமிடைந்த நெடுந்
தண் கானம் ஒன்று உளதால். (12:74:01)



Haliastur indus




வானிலாவு கருங்கொடி

மேனிலாவு பருந்து இனம்

ஏனை நீள் கழுகின் குலம்

ஆன ஊனொடு எழுந்தவே. 12-47-25



Ketupa nipalensis


புட்கள் பொதுத்த புலால்வெண்
தலையைப் புறமே நரிகவ்வ
அட்கென்று அழைப்ப ஆந்தை
வீச அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன்
வெருட்ட ஓரி கதித்து எங்கும்
பிட்க நட்டம் பேணும்
இறைவன் பெயரும் பெருங்காடே. 11-2-3

Mycteria leucocephala



அக்கு அரவம் அரைக்கு அசைத்த அம்மான் கண்டாய்
அருமறைகள்ஆறு அங்கம் ஆனான் கண்டாய்
தக்கனது பெருவேள்வி தகர்த்தான் கண்டாய்
சதாசிவன்காண் சலந்தரனைப் பிளந்தான் கண்டாய்
மைக்கொண் மயிற்றழைகொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியான் கண்டாய் மழுவன் கண்டாய்
கொக்கு அமரும் வயற்புடைசூழ் கொட்டை யூரில்
கோடீச்சரத்து உறையும் கோமான் தானே. 6-72-5

Gyps bengalensis



வாகை விரிந்துவெண் ணெற்று ஒலிப்ப
மயங்கி இருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொடு **ஆண்டலை** பாடஆந்தை
கோடு அதன் மேல் குதித்து ஓடவீசி
ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈமம் இடுசுடு காட்டு அகத்தே
ஆகம் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 11-2-3

Pavo cristatus





Tyto alba


புட்கள் பொதுத்த புலால்வெண்
தலையைப் புறமே நரிகவ்வ
அட்கென்று அழைப்ப ஆந்தை
வீச அருகே சிறு**கூகை**
உட்க விழிக்க ஊமன்
வெருட்ட ஓரி கதித்து எங்கும்
பிட்க நட்டம் பேணும்
இறைவன் பெயரும் பெருங்காடே. 11-2-3

Cyprinus carpio L.



அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரிபொழிந் திழி வெற்பு வைப்பார்.12-3-23

Apis cerana indica L.



கந்தமர் சந்ம் கார் அகில் உந்தண் கதிர்முத்தும்

வந்து அமர் தெண்ணீர் மண்ணி வளம் சேர் வயல்மண்டிக்

கொந்தலர் சோலைக் கோகிலம்ஆடக் குளிர் **"வண்டு"**

செந்திசை பாடும் சீர்திகழ் கண்ணார் கோயிலே. 1-101-2

திருமுறை வனம்

மரங்கள் – தாவரங்கள்

நொச்சியே, வன்னி, கொன்றை, மதி,கூவிளம்,

உச்சியே புனைதல் வேடம்; விடைஊர்தியான்;


கச்சி ஏகம்பம் மேய கறைக்கண்டனை

நச்சியே தொழுமின்! நும்மேல் வினை நையுமே.

(திருமுறை 2:12:2)



Mangifera indica





ஆல் மா மரவமோடு அமைந்த சீர்ச் சந்தனம்
Ficus benghalensisa
சாலமா பீலியும் சண்பகம் உந்தியே
காலமார் முகலிவந்து அணை தரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே. 3:36:2
Lessons of digital classroom of arulalayam


பனை மரம் - palm tree
குரும்பை ஆண்பனை ஈன் குலை ஓத்தூர் (1:54:11)
Arecaceae
Worship tree 🌴
Worship God 🙏
@Visu Iyer

கொள்ளித் தீ-எரி வீசிக் கொடியதுஓர்
கள்ளிக் காட்டுஇடை ஆடுவர்; காண்மினோ!
தெள்ளித் தேறித் தெளிந்துநெய்த் தானனை
உள்ளத் தால்-தொழு வார்உம்பர் வாணரே.

திருமுறை -05:34:07




எறிக்குங் கதிர்வேய் உயர்முத் தமொடும்
இலவங்கந் 'தக்கோலம்' இஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திளைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்திகள் மேற்குயில் கூவலறா
வெறிக்குங் கலைமா வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே.

திருமுறை - 07:42:01



Illicium verum


நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரை தன்மேல்
தேறு சிந்தை உடையார்கள் சேரும் இடம் என்பரால்
ஏறிமாவின் கனியும் பலாவின் இரும் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொடு உண்டுகளும் கேதாரமே.
திருமுறை - 02:114:06
Borassus flabellifer


Bambusa bambos
கோங்கமே, குரவமே, கொன்றை, அம் பாதிர்
மூங்கில், வந்து அணைதரு முகலியின் கரையினில்,
ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடி தொழ,
வீங்கு வெந்துயர் கெடும்; வீடு எளிது ஆகுமே. 3ம் திருமுறை - 3:86:3



வீளைக் குரலும், விளி சங்கு ஒலியும், விழவின் ஒலி ஓவா,

மூளைத்தலை கொண்டு, அடியார் ஏத்த, பொடியா மதிள் எய்தார்

ஈளைப் படுகில் இலை ஆர் தெங்கின், குலை ஆர் வாழையின்,

பாளைக்கமுகின், பழம் வீழ் சோலைப் பழன நகராரே.

திருமுறை -01:67:06

Lessons of digital classroom by arulalayam

Elettaria cardamomum



நுகர் ஆரமொடு "ஏலம்" மணி செம்பொன் நுரை உந்திப்

பகராவரு புனல் காவிரி பரவிப்பணிந்து ஏத்தும்

நிகரால் மணல் இடுதன்கரை நிகழ்வாய நெய்த்தான

நகரான் அடியேத்தும் நமை நடலை அடையாவே. (1:15:5)

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி

மூங்கில்வந்து அணைதரு முகலியின் கரையினில்

ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடிதொழ

வீங்கு வெந்துயர் கெடும் வீடு எளிது ஆகுமே. 3:36:3

Stereospermum chelonoides



வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னி வைத்த பிரான்திரு ஆரூரை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல் வல்லார்க்கு இல்லை பாவமே. 3:45:11



Prosopis cineraria (L.) Druce



Lawsonia inermis

தட்டு இட்டே முட்டிக்கைத் தடுக்கு இடுக்கி நின்று உணாத்

தாமே பேணாதே நாளும் சமணொடு முழல்பவரும்

இட்டத்தால் அத்தம் தான் இது என்றது என்று நின்றவர்க்கு

ஏயாமேவா ஏதுச்சொல் லிலை மலி மருதம்பூப்

புட்டத்தே அட்டு இட்டுப் புதைக்கு மெய்க்கொள் புத்தரும்

போல்வார் தாம் ஓராமே போய்ப் புணர்வுசெய்தவனதிடங்

கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்

காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 1:121:10



Saccharum officinarum

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கிவருபுரமூன்றும் நீள்வாய் அம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி மலையாளி சேரும் கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும் திருவையாறே.

1:130:7

Aegle marmelos (L.) Corrêa



வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்

பொன்னியன்ற சடையில் பொலிவித்த புராணனார்

தென்ன வென்றுவரி வண்டு இசை செய் திருவாஞ்சியம்

என்னை ஆளுடையான் இடமாக உகந்ததே. 2:07:1



பீடு கெழும் பெருந் தெருவும் புத்தருடன் பீலி அமண்

வேடம் உடையவர் பொருள் போல் ஆகாசவெளி மறைக்கும்

ஆடு கொடி மணி நெடுமாளிகை நிரைகள் அலை **கமுகின்**

காடனைய கடல் படப்பை என விளங்கும் கவின் காட்டும். 12:51:2

தாங்கருங் காலந் தவிரவந் திருவர்

தம்மொடுங் கூடினா ரங்கம்

பாங்கினால் தரித்துப் பண்டுபோ லெல்லாம்

பண்ணிய கண்ணுதற் பரமர்

தேங்கொள்பூங் கமுகு தெங்கிளங் கொடிமாச்

செண்பகம் வண்பலா இலுப்பை

வேங்கைபூ மகிழால் வெயில்புகா வீழி

மிழலையா னெனவினை கெடுமே. 3:119:4



Madhuca longifolia


Ficus religiosa
அரசுடன் ஆல் அத்தி யாகும்அக் காரம்
விரவுகனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தான்பெற்ற நீதர்
உருவம் பிரம உயர்குலம் ஆமே. 10-06-3
https://arulalaya.blogspot.com/2026/05/blog-post.html



கறியுமா **மிளகொடு** கதலியின்
பலங்களுங் கலந்துநுந்தி
எறியுமா காவிரி வடகரை
அடைகுரங் காடுதுறை
மறியுலாங் கையினர் மலர் அடி
தொழுது எழ மருவும் உள்ளக்
குறியினார் அவர்மிகக் கூடுவார்
நீடுவான் உலகினூடே. 3:91:4

***Piper nigrum* L.**

Calophyllum inophyllum



மாது ஒரு பாலும் மால் ஒரு பாலும் மகிழ்கின்ற
நாதன் என்று ஏத்தும் நம்பரன் வைகுந்நகர்போலும்
மாதவி மேய வண்டு இசை பாட மயில் ஆடப்
போது அலர் செம்பொன் புன்னை கொடுக்கும் புறவம்மே.

1:97:2

Pterocarpus marsupium



மருவமர் குழல் உமை பங்கர் வார்சடை

அரவு அமர் கொள்கையெம் அடிகள் கோயிலாங்

குரவமர் சுரபுன்னை கோங்கு **வேங்கைகள்**

விரவிய பொழில் அணி விசய மங்கையே. 3:17:1



மருவமர் குழல் உமை பங்கர் வார்சடை

அரவு அமர் கொள்கையெம் அடிகள் கோயிலாங்

குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்

விரவிய பொழில் அணி விசய மங்கையே. 3:17:1



குசையும் அங்கையிற் கோசமுங் கொண்ட அவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையும் தானும் ஒன் றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே. 5-71-1
Desmostachya bipinnata (L.) Stapf

விரிந்தனை குவிந்தனை விழுங்குயிர் உமிழ்ந்தனை
திரிந்தனை குருந்து ஒசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய். 2-31-3



Atalantia monophylla (L.) DC.

Mimusops elengi L.



அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை **வகுளம்** சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. **10:4:03:1**

Zingiber officinale

Creativity belongs to arulalayam



மஞ்சள் எழில்வளமும் மாதுளையின்
வார்பொழிலும்**இஞ்சி** இளங்காவின் ஈட்டமும் – எஞ்சாத

11-38-19

Punica granatum L.

Creativity belongs to arulalayam



மஞ்சள் எழில்வளமும் **மாதுளை**யின் வார்பொழிலும்
இஞ்சி இளங்காவின் ஈட்டமும் – எஞ்சாத 11-38-19

Tectona grandis

Creativity belongs to arulalayam



சந்தமார் அகிலொடு சாதி தேக்கு அம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணை அடி என்மனத் துள்ளவே. 3-36-1

Myristica fragrans



சந்தமார் அகிலொடு **சாதி** தேக்கு அம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணை அடி என்மனத் துள்ளவே.3-36-1

Santalum album



சந்தமார் அகிலொடு சாதி தேக்கு அம்மரம்

உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்

மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி

எந்தையார் இணை அடி என்மனத் துள்ளவே.3-36-1

Aquilaria malaccensis



சந்தமார் **அகிலொடு** சாதி தேக்கு அம்மரம

உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்

மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி

எந்தையார் இணை அடி என்மனத் துள்ளவே.3-36-1

Bombax ceiba



எட்டி **இலவம்** ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே. 11-3-1

Strychnos nux-vomica



எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்து எங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டில் பறைபோல்விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே. 11-3-1


Solanum melongena
https://arulalayam.blogspot.com/
https://arulalaya.blogspot.com/2025/11/blog-post_31.html
வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண்டு ஓடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே. 10-9-17-4
Lessons of digital classroom of arulalayam

Cucurbita maxima



Momordica charantia



வழுதலை வித்திடப் **பாகல்** முளைத்தது

புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது

தொழுதுகொண்டு ஓடினார் தோட்டக் குடிகள்

முழுதும் பழுத்தது வாழைக் கனியே. 10-9-17-4




Azadirachta indica

துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே ஆளுகப்பார்
கைச்சாலும் சிறுகதலி இலைவேம்பும் கறிகொள்வார்
எச்சார்வும் இல்லாமை நீயறிந்தும் எனதுபணி
நச்சாய்காண்; திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே! 9-21-1

Vitex negundo



நொச்சியே வன்னிகொன்றைமதி கூவிளம்
உச்சியே புனைதல்வேடம்விடை யூர்தியான்
கச்சியே கம்பம்மேயகறைக் கண்டனை
நச்சியே தொழுமின்நும் மேல்வினை நையுமே


Salix tetrasperma
மடந்தை தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் - ஏய்ந்தசீர் ஈசன்
சிலையும்எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலுந் திரள்முத்தும் –பாசிலைய
வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோல் 11-9-115
Lessons of digital classroom of arulalayam

Capparis zeylanica



வாழையும் சூரையும் வந்து இ டம் கொண்டன

வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்

வாழையும் சூரையும் வன்துண்டம் செய்திட்டு

வாழை இடம்கொண்டு வாழ்கின்ற வாறே. 10-9-24-54

Citus aurantium



நாளி கேரஞ் செருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளி சாலந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்.12-3-28


Phoenix sylvestris
https://arulalayam.blogspot.com/
ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே. 10-1-11-1
Lessons of digital classroom of arulalayam

Syzygium cumini var. alba



மண்ணது வுண்டரி மலரோன்காணா
வெண்ணாவல் விரும்பும யேந்திரருங்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணல்ஆ ரூராதி யானைக்காவே. 3-109-1

Cedrus deodara



கொடுகொட்டி பாண்டரங் கோடுசங் காரம்
நடம் எட்டோ டு ஐந்துஆறு நாடியுள் நாடும்
திடம்உற்று ஏழும் தேவதாரு வாம் தில்லை
வடம் உற்ற மாவனம் மன்னவன் தானே. 10-9-13-1

Calamus rotang





நெற்றியின் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அநேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்அருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் **பிரம்பும்**
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான். 12-2-11

Cynodon dactylon



அளிக்குலங்கள் சுளித்து அகல அரவிந்தம் முகம் புலரப்
பளிக்கு மணி மரகத வல்லியில் கோத்த பான்மை எனத்
துளித் தலைமெல் அறுகு பனி தொடுத்து அசையச் சூழ் பனியால்
குளிர்க் குடைந்து வெண் படாம் போர்த்து அனைய குன்றுகளும்.

12-24-329

Combretum indicum



அளிக்குலங்கள் சுளித்து அகல அரவிந்தம் முகம் புலரப்
பளிக்கு மணி **மரகத வல்லி**யில் கோத்த பான்மை எனத்
துளித் தலைமெல் அறுகு பனி தொடுத்து அசையச் சூழ் பனியால்
குளிர்க் குடைந்து வெண் படாம் போர்த்து அனைய குன்றுகளும்.


12-24-329

Barringtonia acutangula



மானும்மரை இனமும்மயில் இனமுங்கலந் தெங்குந்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமரம் உரிஞ்சிப்பொழிலூடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே. 7-79-1

Mallotus philippensis



சாங்கம தாகவே சந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமம் கர்ப்பூரம் காரகில்
பாங்கு படப்பனி நீரால் குழைத்துவைத்து
ஆங்கே அணிந்துநீர் அர்ச்சியும் அன்பொடே. 10-4-3-2

Butea monosperma



வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம்
 மலர்ப் பலாசொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங் குரவங் கமழ் புன்னை
 கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதி மரு மாலதி மௌவல்
 துதைந்த நந்திகரம் வீரம் மிடைந்த
பன் மலர்ப் புனித நந்த வனங்கள்
 பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். 12-6 -94

Albizia lebbeck



வாகை விரிந்துவெண் ணெற்று ஒலிப்ப
மயங்கி இருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொடு ஆண்டலை பாடஆந்தை
கோடு அதன் மேல் குதித்து ஓடவீசி
ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈமம் இடுசுடு காட்டு அகத்தே
ஆகம் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 11-2-3

Trewia nudiflora



மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ மதமுகத்த
பனைக்கைமா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச்சோர்வாளோ

4-12-3

Solanum indicum



முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோல் ஒன்று உடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி இடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே. 11-2-5

Limonia acidissima



முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்

கள்ளி வற்றி **வெள்ளில்** பிறங்கு கடுவெங் காட்டுள்ளே

புள்ளி உழைமான் தோல் ஒன்று உடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்

பள்ளி இடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே. 11-2-5

Amaranthus cruentus L.



Tinospora cordifolia (Willd.)



Tarenna asiatica (L.)



வரம் திகழும் அவுணர் மாநகர்மூன்று உடன் மாய்ந்து அவியச்
சரந்துரந்து எரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேய இடம்
குருந்தம் மல்லிகை கோங்கு மாதவி நல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி ஏகம்பம்சேர இடர்கெடுமே. 1.133.2

Schrebera swietenioides.



குரவம் குருக்கத்திகள் புன்னைகள் ஞாழல்

மருவும் பொழில்சூழ்மறைக்காட் டுறைமைந்தா

சிரமும் மலருந்திகழ்செஞ் சடைதன்மேல்

அரவம் மதியோடடைவித் தலழகே. 2-37-3

Terminalia arjuna



மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி

நண்ணுமா முகலியின் கரையினில் நன்மைசேர்

வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா

அண்ணலார் காளத்திஆங்கணைந் துய்ம்மினே. 3-36-9

Cocos nucifera



அங்கத்துறு நோய்களடியார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடுபாலாவியின் கரைமேற்
"தெங்கம்"பொழில் சூழ்ந்ததிருக்கேதீச்சரத் தானே.

7ம் திருமுறை - 7:80:5

11ஆம் திருமுறை - ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை 37 19



"மஞ்சள்" எழில் வளமும்
மாதுளையின் வார் பொழிலும்


Oryza sativa L.
https://arulalayam.blogspot.com/
https://arulalaya.blogspot.com/2025/11/blog-post_93.html
வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாடல் இசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவு ஞானசம் பந்தன்நல்ல
ஒண்சொலின் இவைமாலையுருவெணத் தவமாமே. 1-118-11
Lessons of digital classroom of arulalayam

திருமுறை வனம்

அறிவியல் பெயர்	தமிழ் பெயர்
Aegle marmelos	வில்வ மரம்
Aegle marmelos (L) Correa	கூவிளம்
Aerva lanata (L.)	பூளைப் பூ
Albizia lebbeck	வாகை
Amaranthus cruentus L.	செங்கீரை
Apis cerana indica L.	வண்டு
Aquilaria malaccensis	அகில்
Araneae	சிலந்தி
Areca catechu	கமுகு (பாக்கு)
Arecaceae	பனை
Atalantia monophylla L.	குருந்தம்
Athene brama (Spotted Owlet)	ஆந்தை
Azadirachta indica	வேப்பம் மரம்
Bambusa bambos	மூங்கில்
Barringtonia acutangula	பூமா மரம்
Bombax calba	கோங்கம்
Bombax ceiba	இலவம்
Borassus flabellifer	பலா மரம்
Bos taurus indicus	பசு கன்று
Brachyura	நண்டு
Bubalus bubalis	எருமை
Butea monosperma	பலாசு
Cactaceae	கள்ளி

திருமுறை வனம்

அறிவியல் பெயர்	தமிழ் பெயர்
Calamus rotang	பிரம்பு
Calophyllum inophyllum	புன்னை
Calotropis gigantea	எருக்கு
Camelus dromedarius	ஒட்டகம்
Canis lupus familiaris	நாய்
Capparis zeylanica	சூரை
Capra aegagrus hircus	ஆடு
Cassia fistula	கொன்றை
Cedrus deodara	தேவதாரு
Chital	மான்
Chrysanthemum indicum L	செவ்வந்தி
Citrus aurantium	நரந்தம்
Cocos nucifera	தென்னை
Columba livia domenstica	புறா
Combretum indicum	மரகதவல்லி
Crossandra infundibuliformis	கனகாம்பரம்
Cuculus canorus	குயில்
Cucurbita maxima	பூசணிக்காய்
Curcuma longa	மஞ்சள்
Cygnus cygnus	அன்னம்
Cynodon dactylon	அருகம்புல்
Cyprinus carpio L	கெண்டை மீன்
Datura metel	ஊமத்தை

திருமுறை வனம்

அறிவியல் பெயர்	தமிழ் பெயர்
Desmostachya bipinnata L.	தர்பை
Elephas maximus	யானை
Elettaria cardamomum	ஏலம்
Equus ferus caballus	குதிரை
Erythrina variegata	மந்தாரை
Euphlyctis cyanophlyctis	தேரை
Felis catus	பூனை
Ficus benghalensisa	ஆல மரம்
Ficus religiosa	அரசு
Formicidae	எறும்பு
Funambulus palmarum	அணில்
Gallus gallus domesticus	கோழி
Gloriosa superba	செங்காந்தள்
Gloriosa superba L	கோடல்
Grus spp	வெண் குருகு
Gyps bengalensis	ஆண்டலை
Gyps indicus	கழுகு
Haliastur indus Boddaert	பருந்து
Heterometrus swammerdami	தேள்
Hiptage benghalensis	மாதவி
Illicium verum	தக்கோலம்
ixora coccinea	கொக்கிறகு
Jasminum angustifolium	மௌவல்

திருமுறை வனம்

அறிவியல் பெயர்	தமிழ் பெயர்
Jasminum auriculatum	முல்லை
Jasminum grandiflorum	சாதிமல்லி
Jasminum heyneanum	இருவாச்சி
Jasminum sambac	மல்லிகை
Ketupa nipalensis	ஊமன்
Lawsonia inermis	மருதாணி
Lepus nigricollis	முயல்
Leucas aspera	தும்பை
Limonia acidissima	விளா மரம்
Macaca radiata	குரங்கு
Madhuca longifolia	இலுப்பை
Magnolia champaca	சண்பகம்
Mallotus philippensis	குங்குமம்
Mangifera indica	மா மரம்
Mesua ferrea	புன்னாகம்
Mimusops elengi L.	வகுளம்/மகிழம்
Momordica charantia	பாகல் காய்
Musa paradisiaca	வாழை
Mycteria leucocephala	கொக்கு
Myristica fragrans	சாதிக்காய்
Nelumbo nucifera	அரவிந்தம்
Nelumbo nucifera	தாமரை
Nerium oleander	கரவீரம் (அரளி)

திருமுறை வனம்

அறிவியல் பெயர்	தமிழ் பெயர்
Nymphaea nouchali	குவளை
Nymphaea nouchali Burm. f.	கருங்குவளை
Nymphaea pubescens	ஆம்பல்
Nymphaea rubra Roxb	கழுநீர்
Ochna integerrima	செருந்தி
Origanum majorana	மரிகொழுந்து
Oryza sativa L.	நெல்
Pandanus odorifer	தாழம் பூ
Panthera leo	சிங்கம்
Panthera tigris	புலி
Pavetta indica L.	குரவம்
Pavo cristatus	மயில்
Phoenix sylvestris	ஈச்சம் மரம்
Piper nigrum L.	மிளகு
Prosopis cineraria L. Druce	வன்னி
Psittaciformes	கிளி
Pterocarpus marsupium	வேங்கை
Punica granatum L.	மாதுளை
Rana tigrina	தவளை
Rattus rattus	எலி
Saccharum officinarum	கரும்பு
Salix tetrasperma	வஞ்சி கொடி

திருமுறை வனம்

அறிவியல் பெயர்	தமிழ் பெயர்
Santalum album	சந்தனம்
Saraca asoca	அசோகு
Schrebera swietenioides.	ஞாழல்
Serpentes	பாம்பு
Solanum indicum	முள்ளி
Solanum melongena	கத்திரிக்காய் (வழுதலை)
Stereospermum chelonoides	பாதிரி
Strigiformes	கோட்டான்
Strychnos nux-vomica	எட்டி
Sus scrofa domesticus	பன்றி
Syzygium cumini var.alba	வெண் நாவல்
Tabernaemontana divaricata	நந்தியாவட்டம்
Tectona grandis	தேக்கு
Terminalia arjuna	மருத மரம்
Testudines	ஆமை
Tinospora cordifolia (Willd.)	சீந்தில்
Trewia nudiflora	காஞ்சி மரம்
Tyto alba	கூகை
Ursida	கரடி
Vitex negundo	நொச்சி
Vulpes vulpes	நரி
Weberera corymbosa Willd.	குரா மரம்
Zingiber officinale	இஞ்சி

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நூல்கள்

பன்னிரு திருமுறைகள்

நூல்	நூலாசிரியர்கள்
1ம் திருமுறை (திருக்கடைக்காப்பு)	திருஞானசம்பந்தர்
2ம் திருமுறை (திருக்கடைக்காப்பு)	திருஞானசம்பந்தர்
3ம் திருமுறை (திருக்கடைக்காப்பு)	திருஞானசம்பந்தர்
4ம் திருமுறை (தேவாரம்)	திருநாவுக்கரசர்
5ம் திருமுறை (தேவாரம்)	திருநாவுக்கரசர்
6ம் திருமுறை (தேவாரம்)	திருநாவுக்கரசர்
7ம் திருமுறை (திருப்பாட்டு)	சுந்தர மூர்த்தி சுவாமிகள்
8ம் திருமுறை (திருவாசகம்)	மாணிக்கவாசகர்
9ம் திருமுறை	• திருமாளிகைத் தேவர் • சேந்தனார் • கருவூர் தேவர் • பூந்துருத்தி நம்பி காட நம்பி • கண்டராதித்தர் • வேணாட்டிகள் • திருவாலியமுதனார் • புருடோத்தம நம்பி • சேதிராயர்
10ம் திருமுறை (திருமந்திரம்)	திருமூலர்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நூல்கள் பன்னிரு திருமுறைகள் (தொடர்ச்சி)

நூல்	நூலாசிரியர்கள்
11ம் திருமுறை	• திரு ஆலவாய் உடையார் • காரைக்கால் அம்மையார் • ஐயடிகள் காடவர்கோன் • சேரமான் பெருமான் நாயனார் • நக்கீரர் தேவர் • கல்லாட தேவர் • கபில தேவர் • பரண தேவர் • இளம் பெருமான் அடிகள் • அதிராவடிகள் • பட்டினத்துப் பிள்ளையார் • நம்பியாண்டார் நம்பி
12ம் திருமுறை (பெரியபுராணம்)	சேக்கிழார்

படங்கள் கொடுத்து உதவியவர்கள்:

இணைய தலம்	இணைய தள முகவரி
Wikimedia common	https://commons.wikimedia.org/
Unsplash	https://unsplash.com/
Pixabay	https://pixabay.com/

For complete reference login

https://arulalaya.blogspot.com/p/blog-page_27.html

Disclaimer:

This work is a devotional and educational compilation based on interpretations of Thirumurai hymns. The scientific names and references are provided for general informational purposes.


குறிப்புகளுக்காக....

குறிப்புகளுக்காக....

குறிப்புகளுக்காக....

ஆசிரியரின் பிற நூல்கள்



















































ஆசிரியர் குறிப்பு



ஆசிரியர் :	விசு அய்யர்
பிறப்பு :	தமிழ்நாட்டில் சிவகெங்கை சீமை
படிப்பு :	முதுகலை வரி சட்டம்
பாராட்டுக்கள் :	பள்ளியில் சிறந்த மாணவர் நினைவு திறன் போட்டி பரிசு சித்தாந்த ரத்னா திருவருட் செல்வர் கைரேகை கலைஞன்
விரும்பும் நூல்கள்	பெரியபுராணம், திருக்குறள்
படைப்புகள்	35க்கும் மேற்பட்ட நூல்கள் ஆய்வு கட்டுரைகள்
பிற குறிப்புகள்	கையில் திருக்குறள் பையில் திருநீறு மெய்யில் உருத்திராக்கம்